**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.84 & 85 /2024 – PW- 3**

| | |
|---|---|
| Name | திரு. டில்லிபாபு |
| Husband/Father Name | சுப்பிரமணி |
| Village /Area | பள்ளூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 30 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.07.2025.

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. நானும் இறந்த கௌதமும் ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்து வந்ததால் என்னை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் மேற்படி கௌதம் இறந்த விவரத்தை சம்பவம் நடந்து 1 அரை நாட்கள் கழித்து தெரிந்து கொண்டேன். போலீசார் என்னிடம் கௌதம் எப்படி இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டார்கள் எனக்கு தெரியாது என்று கூறினேன். ஏற்கனவே நான் இந்த சம்பவம் தொடர்பாக வாலாஜா நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலம் என்னால் மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அதசா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

நானும் கோகுல், கௌதம் ஆகியோர்கள் நணபர்கள். 20.06.2023 அன்று மதியம் சுமார் 02.45 மணியளவில் நான் கோகுலுக்கும் கௌதமிற்கும் போன் செய்து வர சொன்னதின் பேரில் வரசொல்லிவிட்டு நானும் கோகுலும் டாஸ்மாக் கடைக்கு சென்ற போது அங்கிருந்த நிஷாந்த் அவரது நண்பர்கள் அப்பு எ தீனா, சரத், பகத்சிங், திலீப், பரத், பார்வேந்தன் ஆகியோர்கள் விமல் இறப்பதற்கு காரணமான கௌதமை கொலை செய்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டியதை நானும் கௌதமும் கோகுல் மூவரும் குடித்துக்கொண்டிருக்கும் போது பேசிக்கொண்டிருந்ததீர்கள். சுமார் 03.30 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் நிஷாந்த் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் தலையில் வெட்டிய போது கௌதமுடன் இருந்த நானும் கோகுலும் அங்கிருந்து எழுந்து ஓடிவிட்டிர்கள் என்றும் கொஞ்சம் தொலைவு சென்று திரும்பி பார்த்த போது ஓட இருந்த கௌதமை பகத்சிங் காலை பிடித்து தரையில் அழுத்தி கொண்டதன் பேரில் நிஷாந்த், அப்பு எ தினேஷ் அவர்களில் கையில் வைத்திருந்த கத்தியால் கௌதமின் தலையில் மாறி மாறி வெட்டினார்கள். அவர்களிடமிருந்து கத்தியை வாங்கி தீனாவும், தீலிப் ம் கௌதமின் தலை, இடது முழங்கை , வலது காதின் மீது மாறி மாறி வெட்டினார்கள் என்றும் பார்வேந்தன் என்பவர் தீலிபிடம் இருந்து கத்தியை வாங்கி கௌதமின் வலது முகங்காலின் மீது வெட்டினார்கள் என்றும் சரத் மற்றும் விஜயகுமார் சுற்றி நின்று யாரும் வராத மாறு பார்த்துக்கொண்டார்கள் அப்போது அங்கு வந்த கௌதமின் அம்மா ஜெயக்கொடி, குமார் ஆகியோர்கள் சத்தம் கேட்டு ஆட்கள் வரவே மேற்படி நபர்கள் தப்பி ஓடிவிட்டார்கள் என்றும் போலீஸ் விசாரணையில்

கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் 1 முதல் 8 வரை தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் நான் கோகுல் மற்றும் கௌதம் சந்திக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆஜர் எதிரிகள் யாரும் எனக்கு தெரியாது. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு நான், குமார், கோகுல், ஜெயக்கொடி ஆகியோர்கள் ஒன்றாக தான் சென்றோம். எங்கள் நால்வருக்கும் ஆய்வாளர் கூறியதன் அடிப்படையில் தான் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தோம். அந்த வாக்குமூலத்தை நான் அழுத்தத்தின் பேரில் தான் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**ஒம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**